بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 10

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் ஸானீ 16 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அகா 09 ★ 09 அக்டோபர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّاۤ اَنۡزَلۡنَاۤ اِلَیۡکَ الۡکِتٰبَ بِالۡحَقِّ

فَاعۡبُدِ اللّٰہَ مُخۡلِصًا لَّہُ الدِّیۡنَ ③

**பொருள்**

நிச்சயமாக நாமே உமக்கு இவ்வேதத்தை முற்றிலும் உண்மையுடன் இறக்கினோம். நம்பிக்கையை முற்றிலும் அவனுக்காக ஆக்கியவனாய் நேர்மையுடன் அல்லாஹ்வை வணங்குவீராக.

( அஸ்ஸுமர்: 03)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர்கள் இறைவனின் நேசத்திற்குரியவர்களாக இருக்கின்றனரோ அந்த மக்களுக்கு இறைவன் புறம் இருந்து நிச்சயமாக துன்பங்களும் சோதனைகளும் வருவதுண்டு**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### சோதனை

நம்பிக்கையாளர்களுக்கு துன்பங்களும் சோதனைகளும் வருகின்றன என்ற விஷயத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் தனது மகளை ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்யும்படி வேண்டினார். அந்தப் பெண்ணின் சிறப்புகளாக பலவற்றை அவர் எடுத்துரைத்தார். அதில் ஒன்றாக இந்த விஷயத்தையும் கூறினார். அதாவது அவளுக்கு இவ்வளவு வயதாகிவிட்டது; ஆயினும் இன்று வரை அவளுக்கு எந்த நோயும் வந்ததில்லை என்று கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; எவர்கள் இறைவனுக்கு நேசத்திற்குரியவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து நிச்சயமாக துன்பங்களும், சோதனைகளும் வந்து கொண்டிருக்கும்.

(நண்பர்களில் ஒருவருக்கு எதிரிகளின் புறமிருந்து ஏராளமான துன்பங்கள் நேரிட்டுக் கொண்டிருந்தன. அவர் தனது நிலையை ஹுஸூர் (அலை) அவர்களிடம் முறையிட்டார்.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள் :

நீங்கள் ஏராளமான துன்பங்களை அனுபவித்துள்ளீர்கள். இந்த விஷயம் உங்களிடம் பாராட்டத்தக்கதாகும். எந்த அளவிற்கு சோதனைகள் வருமோ அதே அளவிற்கு அருட்கொடைகளும் இருக்கும் .

اِنَّ مَعَ الۡعُسۡرِ یُسۡرًا

**எதிரிகளுடன் நன்னடத்தை**

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் ……

**இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்ட அந்த காலம் வந்துவிட்டது. அவனது கருணையின் நதியானது உள்ளங்களின் வறண்ட நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக தனது கரையோரங்களில் ஆர்ப்பரித்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த தெய்வீக நீரில் இருந்து பயன் பெறக்கூடிய மக்களும் ஆணவம் மற்றும் அகந்தையை கைகொள்ளாத மக்களும் மட்டுமே தற்போது வெற்றி பெற முடியும்**

وَاَنۡزَلۡنَا مِنَ السَّمَآءِ مَآءًۢ بِقَدَرٍ
فَاَسۡکَنّٰہُ فِی الۡاَرۡضِ ٭ۖ وَاِنَّا عَلٰی
ذَہَابٍۭ بِہٖ لَقٰدِرُوۡنَ ⑲

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

وَاِنَّا عَلٰی ذَہَابٍ بِہٖ لَقَادِرُوۡنَ

என்பதில் இஸ்லாத்தின் வீழ்ச்சியை பற்றி மட்டுமே செய்தி வழங்கப்பட்டிருக்கவில்லை. மாறாக இந்த விஷயமும் கூறப்பட்டுள்ளது. அதாவது அந்த இருளான காலத்தில் ஆன்மிகத் தேடல் கொண்டவர்கள் பார்வையற்றவர்களைப் போன்று தட்டுத் தடுமாறிக் கொண்டிருப்பார்கள். அல்லாஹ் கிழக்கிலிருந்து தனது ஒரு நபியை எழுப்புவான். அவருடைய ஒளிக் கதிர்களால் ஐயம் மற்றும் சந்தேகங்கள் எனும் இருள் அகற்றப்படும். வறண்ட நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படும். மேலும் ஆன்மிகம் மற்றும் இறையச்சத்திற்கான பயிர்கள் விளைவிக்கப்படும்.

ஒரு வறண்ட காட்டைப் போன்று ஆகிப் போகியிருந்த அந்த உலகம் ஒரு பசுமையான நிலத்தைப் போன்று ஆகிவிட வேண்டும் என்பதற்காகவும், மக்கள் வாழ்க்கை மற்றும் மகிழ்ச்சிக்கான மூச்சுக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்யப்படும். மேலும் இறை நேசம் மற்றும் இறை சந்திப்பு இன்றி ஒருபோதும் பெற முடியாத அந்த உண்மையான இன்பத்தை மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு செய்யப்படும்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான். எவ்வாறு புத்தம் புதிதாக இறங்கக் கூடிய

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் ……

## நபிமொழி

**சாலையில் கீழே விழுந்து கிடக்கும் பொருள் தொடர்பான வழிகாட்டல்**

ஹஸ்ரத் ஜுஹனி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள்:

இறை தூதர் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு நபர் வந்தார். மேலும் சாலையில் கீழே விழுந்து கிடக்கும் பொருட்கள் அவர் தொடர்பாக கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்: அதன் பையையும் அதன் மூடியையும் அடையாளம் வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஓர் ஆண்டு வரை அது தொடர்பாக அறிவிப்பு செய்து கொண்டிருங்கள். அதன் உரிமையாளர் வந்துவிட்டால் நல்லது :இல்லை என்றால் நீர் விரும்பியபடி அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வழி தவறி வந்த ஆடு (தொடர்பாக ஹுஸூர் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் என்ன)? என்று அவர் கேட்டார். அது உமக்குரியதாகும் அல்லது உமது சகோதரர்களுக்குரியதாகும் அல்லது ஏதாவது ஓநாய்க்குரியதாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

மேலும் வழிதவறிய ஒட்டகமோ ? என்று அவர் கேட்டார். அன்னார் ( ஸல்) கூறினார்கள்:அது குறித்து உமக்கு என்ன? அதனுடன் அதன் தண்ணீர் பையும் உள்ளது; அதற்கு கால்களும் உள்ளன;அதிலிருந்து தண்ணீர் குடித்துக் கொள்ளும். மேலும் மரங்களில் இருந்து உண்டு கொள்ளும் எதுவரை என்றால் அதனுடைய உரிமையாளர் அதனை சென்றடைந்து விடுவார்.

( ஸஹீஹ் புஹாரீ, தொகுதி 4, கிதாபுல் மஸாகாத், காதியான்

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுனைன் போரில் நிகழ்ந்த சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆச்சரியம் கொள்ளத்தக்க அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு**

இமாமின் குரலுடன் ஒப்பிடும்போது, மக்களின் குரல் எந்த உண்மைத்துவத்தையும் கொண்டிருப்பதில்லை. இறைத்தூதரின் குரல் உங்களுடைய செவிகளில் கேட்கும் போதெல்லாம், உடனடியாக அதற்கு செவிசாய்த்திடுங்கள். அதை செயல்படுத்துவற்காக விரைந்து செயல்படுவது உங்களது கடமையாகும்.ஏனென்றால்,இதில்தான் உங்கள் முன்னேற்றத்தின் ரகசியம் மறைந்துள்ளது. இன்னும் சொல்வதாயின்,அந்த நேரத்தில் மனிதன் தொழுது கொண்டிருந்தாலும், அவன் தொழுகையை முறித்துவிட்டு, இறைவனின் தூதரின் குரலுக்கு பதிலளிப்பது அவனது கடமையாகும் - (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் போரின் சந்தர்ப்பத்தின்போது மிகுந்த உத்வேகத்துடன், ‘என் பயண விலங்கின் கடிவாளத்தை விட்டுவிடுவீராக‘ என்று கூறினார்கள். பின்னர் தமது குதிகாலை அசைத்து முன்னேறத் தொடங்கினார்கள். மேலும், இவ்வாறு கூறிக் கொண்டே சென்றார்கள்:

اَنَا النَّبِيُّ لَا كَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

பொருள்: எவருடைய பாதுகாப்புக்கான நிரந்தரமான வாக்குறுதி உள்ளதோ நான் அந்த வாக்குறுதியளிக்கப்பட்ட நபி ஆவேன். நான் பொய்யன் அல்லன். எனவே, நீங்கள் வில்லாளர்கள் 3000 பேரோ அல்லது 30,000 பேரோ எனக்கு உங்களைப் பார்த்து எந்தக் கவலையும் இல்லை

இணை வைப்பாளர்களே! எனது இந்தத் துணிச்சலைக் கண்டு, நீங்கள் என்னை இறைவன் எனக் கருதிவிடாதீர்கள். நான் ஒரு மனிதனாவேன். உங்கள் தலைவர் அப்துல் முத்தலிப்பின் மகனாவேன். அதாவது, பேரனாவேன்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 செப்டம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தபூக்** மாதம் **05 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுனைன் போரில் எதிரி வில்லாளிகளால் முஸ்லிம் படையில் பதற்றம் ஏற்பட்டது பற்றிய விளக்கத்தை எடுத்துரைத்தவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், சூரா அந்நூரின் 64 ஆவது வசனத்திற்கான விளக்கவுரையிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும்? என்பது குறித்து இந்த நிகழ்வை எடுத்துரைத்துள்ளார்கள். அந்த வசனம் இதுவாகும்:

لَا تَجْعَلُوْا دُعَآءَ الرَّسُوْلِ بَيْنَكُمْ كَدُعَآءِ بَعْضِكُمْ بَعْضًا قَدْ يَعْلَمُ اللّٰهُ الَّذِيْنَ يَتَسَلَّلُوْنَ مِنْكُمْ لِوَاذًا فَلْيَحْذَرِ الَّذِيْنَ يُخَالِفُوْنَ عَنْ اَمْرِهٖۤ اَنْ تُصِيْبَهُمْ فِتْنَةٌ اَوْ يُصِيْبَهُمْ عَذَابٌ اَلِيْمٌ

இதன் பொருள்: (நம்பிக்கை கொண்டவர்களே!) உங்களுள் ஒருவரை இத்தூதர் அழைப்பது, உங்களுள் ஒருவர் மற்றவரை அழைப்பது போன்றேயாகும் எனக் கருதாதீர்கள். (ஆலோசனை மன்றத்திலிருந்து) உங்களுள் மறைவாக நழுவி விடுபவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிகின்றான். எனவே இ(த்தூது)வருடைய கட்டளைக்கு மாற்றம் செய்பவர்கள் (இறைவனிடமிருந்து) ஏதேனும் துன்பம் தங்களுக்கு நேர்ந்து விடுமோ அல்லது துன்புறுத்தும் தண்டனை தங்களுக்கு வந்து விடுமோ என்று அஞ்ச வேண்டும்.

அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: இமாமின் குரலுடன் ஒப்பிடும்போது, மக்களின் குரல் எந்த உண்மைத்துவத்தையும் கொண்டிருப்பதில்லை. இறைத்தூதரின் குரல் உங்களுடைய செவிகளில் கேட்கும் போதெல்லாம், உடனடியாக அதற்கு செவிசாய்த்திடுங்கள். அதை செயல்படுத்துவற்காக விரைந்து செயல்படுவது உங்களது கடமையாகும். ஏனென்றால், இதில்தான் உங்கள் முன்னேற்றத்தின் ரகசியம் மறைந்துள்ளது. இன்னும் சொல்வதாயின்,அந்த நேரத்தில் மனிதன் தொழுது கொண்டிருந்தாலும், அவன் தொழுகையை முறித்துவிட்டு, இறைவனின் தூதரின் குரலுக்கு பதிலளிப்பது அவனது கடமையாகும். எப்படியிருந்தாலும், நபியின் குரலுக்கு உடனடியாக செவிசாய்ப்பது ஒரு கட்டாயமான விஷயமாகும். இன்னும் கூறுவதாயின், அது ஈமானின் அடையாளங்களில் ஒரு பெரிய அடையாளமாகும்.

நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் அறிவுரை வழங்கியவாறு கூறுகிறான்:

நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனின் தூதர் உங்களை அழைத்தால், அவர் அழைப்பதை மற்றவர்கள் அழைப்பது போன்று கருதாதீர்கள். மாறாக, உடனடியாக அவரது குரலுக்கு செவிசாய்த்திடுங்கள். ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இருவேறு நிலைகள் உள்ளன என்றவாறு கூறியுள்ளான். ஒன்று உலக அதிகாரியாக இருப்பது, மற்றொன்று நபியாக இருப்பது. ஓர் உலகத் தலைவர் என்கிற வகையிலும் அவர்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது அவசியமாகும். ஆனால், ஒரு மார்க்கத் தலைவர் என்கிற வகையிலோ, அவர்களது குரலுக்கு செவிசாய்ப்பது இன்னும் முதன்மையானது.

அன்னார் (ரலி) ஹுனைன் போரின் நிகழ்வை இங்கே எடுத்துரைத்துள்ளார்கள். அதன் விளக்கத்தில் விவரித்தவாறு கூறுகிறார்கள்:

ஹுனைன் போரின் போது, மக்காவின் காஃபிர்கள் இன்று நாங்கள் எங்களது வீரத்தின் திறமையைக் காண்பிப்போம் என்று கூறி இஸ்லாமியப் படையில் இணைந்து விட்டார்கள். பின்னர், பனூ ஃசகீஃபின் தாக்குதலைத் தாங்க முடியாமல், போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டனர். அப்பொழுது ஒரு கட்டத்தில், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களைச் சுற்றி 12 ஸஹாபிகள் மட்டுமே எஞ்சியிருந்தனர் என்பது வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது.

10,000 பேர் கொண்டிருந்த இஸ்லாமியப் படையில் நெரிசல் ஏற்பட்டது. மேலும், காஃபிர்களின் படை 3000 வில்லாளர்களைக் கொண்டிருந்தது. அன்னாரது வலது மற்றும் இடதுபுறத்தில் இருந்த மலைகளில் ஏறி அன்னார் (ஸல்) மீது அம்புகளைப் பொழிந்து கொண்டிருந்தது. ஆனால், அப்பொழுதும் அன்னார்(ஸல்) பின்வாங்க விரும்பவில்லை. மாறாக, முன்னால் செல்ல விரும்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து, அன்னாரது பயண விலங்கின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் உயிர் தங்களுக்காக அர்ப்பணமாகட்டும்!

இது முன்னால் செல்லும் நேரம் அல்ல. இஸ்லாமியப் படை இப்பொழுது ஒன்று சேர்ந்து விடும்; பிறகு நாம் முன்னேறிச் செல்வோம் என்று பணிவுடன் கூறினார்கள்.ஆனால், பெருமானார் (ஸல்)

அவர்கள் மிகுந்த உத்வேகத்துடன், 'என் பயண விலங்கின் கடிவாளத்தை விட்டுவிடுவீராக' என்று கூறிவிட்டு, பின்னர் தமது குதிகாலை அசைத்து முன்னேறத் தொடங்கினார்கள். மேலும், இவ்வாறு கூறிக் கொண்டே சென்றார்கள்:

اَنَا النَّبِيُّ لَا كَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

பொருள்: எவருடைய பாதுகாப்புக்கான நிரந்தரமான வாக்குறுதி உள்ளதோ நான் அந்த வாக்குறுதியளிக்கப்பட்ட நபி ஆவேன். நான் பொய்யன் அல்லன்.

எனவே, நீங்கள் வில்லாளர்கள் 3000 பேரோ அல்லது 30,000 பேரோ எனக்கு உங்களைப் பார்த்து எந்தக் கவலையும் இல்லை. இணை வைப்பாளர்களே! எனது இந்தத் துணிச்சலைக் கண்டு, நீங்கள் என்னை இறைவன் எனக் கருதிவிடாதீர்கள். நான் ஒரு மனிதனாவேன். உங்கள் தலைவர் அப்துல் முத்தலிப்பின் மகனாவேன். அதாவது, பேரனாவேன்.

பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் குரல் மிகவும் உரத்த குரலாக இருந்தது. அன்னார் (ஸல்), அவரைப் பார்த்து, அப்பாஸ்! முன்னால் வாருங்கள்! குரல் கொடுங்கள்! மேலும், சூரா பக்கராவின் சஹாபிகளே! அதாவது, சூரா பக்கராவை மனனம் செய்தவர்களே! ஹுதைபியா நாளில் மரத்தடியில் உறுதிமொழி எடுத்தவர்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கிறார்! என்று உரத்த குரலில் கூறுங்கள் ! என்று கூறினார்கள்.

ஒரு சஹாபி கூறுகிறார்: மக்காவின் புதிதாக முஸ்லிம் ஆனவர்களின் கோழைத்தனத்தால் இஸ்லாமியப் படையின் முன்பக்கம் பின்னோக்கி ஓடியபோது, எங்களுடைய பயண விலங்குகளும் ஓடத் துவங்கின.நாங்கள் அவற்றைத் தடுக்க தடுக்க அவை இன்னும் பின்பக்கத்தை நோக்கி ஓடின. எதுவரை என்றால், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் குரல் களத்தில் இவ்வாறு எதிரொலித்தது: சூரா அல்பக்கராவின் சஹாபிகளே!'. அவர்கள் குறிப்பாக சூரா பக்கராவின் பெயரால் ஏன் அழைத்தார்கள்?என்றால், இது மதீனாவில் இறங்கிய முதல் சூராவாகும்.மேலும், இந்த சூராவில்,குறைவான மக்கள் இறைவனின் கட்டளையால் அதிகமான மக்கள் மீது ஆதிக்கம் பெறுகிறார்கள் எனும் வசனங்களும் உள்ளன.மேலும், வாக்குறுதிகள் மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கான வலியுறுத்தலும் இதில் உள்ளது.

ஹுதைபியா நாளில் மரத்தடியில் பைஅத் செய்தவர்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கிறார்!' என்று கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: இந்தக் குரல் என் காதுகளில் எட்டியதும், நான் உயிருடன் இல்லை; மாறாக, இறந்துவிட்டேன். மேலும்,இஸ்ராஃபிலின் எக்காளம் காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பது போன்று உணர்ந்தேன்.நான் என் ஒட்டகத்தின் கடிவாளத்தை பலமாக இழுத்தேன். அதன் தலை அதன் முதுகில் மோதியது.ஆனால், அது எவ்வளவு பயந்து போயிருந்தது என்றால், நான் கடிவாளத்தை தளர்த்தியவுடன், அது மீண்டும் பின்னோக்கி ஓடியது. இதனால், நானும் என் தோழர்கள் பலரும் வாள்களை உருவினோம். பலரோ ஒட்டகத்திலிருந்து கீழே குதித்து விட்டார்கள். பலர் ஒட்டகங்களின் தலையை வெட்டி விட்டார்கள். மேலும், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களை நோக்கி ஓடத் தொடங்கினர்கள். சில நிமிடங்களிலேயே,வலுவற்றதாக மக்காவை நோக்கி ஓடிக்கொண்டிருந்த 10,000 ஸஹாபிகளைக் கொண்ட படை, அன்னாரைச் சுற்றி ஒன்று திரண்டது. சிறிது நேரத்திலேயே, அது மலைக் குன்றுகளில் ஏறி எதிரிகளை அழித்து விட்டது. இந்த ஆபத்தான தோல்வி ஒரு மாபெரும் வெற்றியாக மாறி விட்டது.

இதேபோல், உஸ்வா ஹஸனா - அழகிய முன்மாதிரி என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களும் இந்த நிகழ்வை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

மக்கா வெற்றிக்குப் பிறகு, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் சில அரபுக் கோத்திரங்களை எதிர்கொள்வதற்காக ஹுனைன் போருக்குச் சென்றபோது, மக்காவில் பலர் புதிதாக முஸ்லிம்கள் ஆகியிருந்ததாலும், அவர்கள் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். இன்னும் முஸ்லிம்கள் ஆகாதவர்களும் மேன்மையை வெளிப்படுத்துவதற்காகவும் சமுதாய உத்வேகத்தாலும் முஸ்லிம்களின் படையுடன் இணைந்து கொண்டார்கள். அவர்கள் தங்களது அதிக எண்ணிக்கை மற்றும் வலிமையைப் பற்றி பெருமை பேசத் தொடங்கி விட்டார்கள். அதாவது, 'நாங்கள் மிகவும் ஏராளமானவர்கள். இன்று யாரும் எங்களைத் தோற்கடிக்க முடியாது' என்று கூறினர். அவர்களின் ஆணவத்திற்கு அவர்களைத் தண்டிக்க, அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்தான் என்றால்,முஸ்லிம்களின் படை முன்னேறியபோது, எதிரிகள் பதுங்கும் இடங்களில் ஒளிந்து கொண்டனர்.மேலும், அவர்களின் பெரிய பெரிய திறமையான வில்லாளர்கள் சிலர் வலதுபுறத்திலும், சிலர் இடதுபுறத்திலும் என ஒளிந்து கொண்டனர். ஆயிரக்கணக்கான வில்லாளர்கள் வலது மற்றும் இடதுபுறத்தில் மறைந்திருந்த இடத்தைப் படை கடந்து சென்றபோது, அவர்கள் திடீரென்று இஸ்லாமியப் படையின் மீது அம்பு மழை பொழியச் செய்தார்கள்.இதைக் கண்ட ஹதீஸுல் அஹத், அதாவது, அப்பொழுது பலவீனமாக இருந்த இளம் வயது, புதிய முஸ்லிம்களும், சமுதாய உத்வேகத்தால் மட்டுமே முஸ்லிம்களுடன் இணைந்த மக்காவின் காஃபிர்களும், போர்க் களத்திலிருந்து கண்மூடித்தனமாக ஓடிவிட்டனர்.முன்னால் இருக்கும் மக்கள் ஓடும்போது, அத்தகைய சூழ்நிலையில், கண்டிப்பாக பின்னால் வருபவர்களின் குதிரைகளும் பயந்து போய் விடுகின்றன.

அவையும் ஓடத் தொடங்கி விடுகின்றன. எனவே, இந்தப் போரிலும் அவ்வாறே நடந்தது. அந்த ஹதீஸுல் அஹத் முஸ்லிம்களும் காஃபிர்களும் அம்புகளின் தாக்குதலைத் தாங்க முடியாமல் ஓடியபோது, சஹாபாவின் குதிரைகளும், ஒட்டகங்களும் கூட ஓடத் தொடங்கி விட்டன. முழு இஸ்லாமியப் படையும் சிதறிப் போனது. இந்த இன்னல் எந்த அளவு அதிகரித்தது? என்றால், கண்ணியத்திற்குரிய ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி 12 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர். மற்றவர்கள் அனைவரும் போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டனர். இதைக் கண்ட ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, 'இப்போது நிற்கின்ற நேரம் இல்லை; குதிரையின் கடிவாளத்தைத் திருப்புங்கள்; இஸ்லாமியப் படையை மீண்டும் ஒன்று திரட்டித் தாக்குதல் தொடுக்கலாம்; திரும்பிச் செல்லுங்கள்' என்று கூறினார்கள். ஆனால், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வின் நபிமார்கள் போர்க் களத்தில் புறமுதுகிட்டுச் செல்வதில்லை' என்று கூறினார்கள். இதைக் கூறிவிட்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து, தமது குதிகால்களை அசைத்து, இன்னும் முன்னால் கொண்டு சென்றார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்:

اَنَا النَّبِيُّ لَا كَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

நான் இறைவனின் நபி ஆவேன்; பொய்யன் அல்லன். இன்று இந்த வில்லாளர்களுக்குப் பயப்படாத நான், நாலாயிரம் வில்லாளர்களால் சூழப்பட்டிருந்தும் முன்னேறிக் கொண்டே செல்கிறேனே! இந்தக் காட்சியைப் பார்த்து நான் இறைவன் என்றோ அல்லது என்னிடமும் இறை பண்புகள் இருப்பதாகவோ நினைத்து விடாதீர்கள்;

நினைவில் கொள்ளுங்கள்! நான் இறைவன் அல்லன்; நானோ அதே அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன் (அதாவது, வழித்தோன்றல் ஆவேன்). ஆனால், இந்த மக்கள் இறைவனைக் காட்டும் மக்கள் ஆவார்கள்.அதாவது, நபிமார்கள், ரஸூல்மார்கள்,இறைநேசர்கள் ஆகியோர் இறைவனைக் காட்டும் மக்கள் ஆவார்கள். அவர்கள் இறைவனைக் காட்டுபவர்கள் ஆவார்கள். இந்த சூழ்நிலை ஏற்பட்டு, எதிரி முஸ்லிம்களைக் கொன்றதாக நினைத்து மகிழ்ச்சி அடைந்தபோது, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களை நோக்கி, அப்பாஸே! அன்ஸாரிகளே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) உங்களை அழைக்கிறார் என்று குரல் கொடுப்பீராக! என்று கூறினார்கள்.

அன்ஸாரிகளே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) உங்களை அழைக்கிறார் என்ற ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தச் சொற்றொடரை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் உரத்த குரலில் கூறியபோது,

அந்த நேரத்தில், அன்ஸாரி ஒருவர் கூறுகிறார்: எங்கள் குதிரைகள் மற்றும் ஒட்டகங்கள் எங்கள் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தன. அவை மக்கா, மதீனாவுக்கு அக்கம் பக்கம் நிற்காது என்பது போன்று தெரிந்தது. மக்காவின் ஆயிரக்கணக்கான மக்கள் ஓடிப்போனதனால், எவ்வளவு பயந்துபோயிருந்தன என்றால், எப்படியும் அவை திரும்பிய பாடில்லை; நாங்கள் எங்கள் பயண விலங்குகளின் கடிவாளங்களை இழுப்போம்; அவற்றின் முகங்கள் அவற்றின் வால்களைத் தொடும் அளவுக்கு கடுமையாக பலத்தைப் போடுவோம். ஆனால், திரும்பிச் செல்வதற்குப் பதிலாக, அவை பின்னோக்கியே ஓடின. நாங்கள் இந்த நிலையிலேயே இருக்கும்போது,

அன்ஸாரிகளே! அல்லாஹ்வின் தூதர் உங்களை அழைக்கிறார் என்ற ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் எதிரொலிக்கும் குரல் எங்கள் காதுகளில் கேட்டது. அவர்கள் கூறுகிறார்கள்:

அந்தக் குரலைக் கேட்டதுமே எங்கள் நிலை எப்படி ஆகிவிட்டது? என்றால், ஒரு மனிதர் எங்களை அழைப்பது போன்று எங்களுக்குத் தென்படவில்லை. மாறாக, அது கியாமத் நாள் போன்றும், இறந்த ஆன்மாக்களை உயிர்ப்பிக்க இஸ்ராஃபிலின் எக்காளம் ஊதப்படுகிறது என்பது போன்றும் எங்களுக்குத் தென்பட்டது. அந்த நேரத்தில், எங்களுக்கு உலகத்தைப் பற்றியும் உலகத்தில் இருப்பவற்றைப் பற்றியும் எந்த உணர்வும் இருக்கவில்லை.எங்கள் காதுகளில் ஒரே ஒரு குரல் மட்டுமே ஒலிக்கத் தொடங்கியது. அது அப்பாஸின் குரல் ஆகும். அந்த நேரத்தில், எங்கள் பலவீனம் அனைத்தும் மறைந்து, ஒன்று எங்கள் குதிரைகளையும் ஒட்டகங்களையும் எங்களால் தடுக்க முடியாது என்று நாங்கள் உணர்ந்தோம் அல்லது கடைசியாக மீண்டும் பலத்தைப் பயன்படுத்தினோம். எங்கள் குதிரைகளையும், ஒட்டகங்களையும் திருப்ப முழு முயற்சி செய்தோம்; திரும்பியவை திரும்பின; எவை திரும்பவில்லையோ, நாங்கள் எங்கள் வாள்களை உருவி அவற்றின் தலைகளை சீவி விட்டோம்; மேலும் ஓடிச் சென்று கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களை சென்றடைந்தோம்.

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அந்த ஈமானில் இருந்து பயனடைந்தவர்கள் இவர்கள்தான். எனவே, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மேன்மையைப் போலவே, எவ்வாறு எந்த ஆபத்து வந்தாலும்,இறைவன் அன்னாருடைய கண்களிலிருந்து மறைந்துவிடவில்லையோ அவ்வாறே இதே மேன்மை பெருமானார் (ஸல்) அவர்களின் தர்பிய்யத்தின் தாக்கத்தால் சஹாபிகளிடமும் அவர்கள் அவர்களது தரத்திற்கு ஏற்ப பிறந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் யார் யார் எல்லாம் உறுதியாக நின்றார்கள் என்பது தொடர்பாக அறிவிப்புகளில் வருகிறது. ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹுனைன் போரின்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். முஸ்லிம்கள் ஓடிப் போய் விட்டனர். மாநபி (ஸல்) அவர்களும், அன்னாருக்கு அருகில் முஹாஜிர்கள் அன்ஸாரிகளில் 80 பேரும் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். நாங்கள் உறுதியாக நிலைத்து நின்றோம். புறமுதுகிட்டு ஓடவில்லை. இவர்கள் மீதுதான் அல்லாஹ் நிம்மதியை இறக்கினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்தார்கள். ஓர் அடி கூட பின்வாங்கவில்லை. அன்னாரது கோவேறு கழுதை குனிந்தபோது, அன்னார் (ஸல்) சேணத்திலிருந்து கீழே குனிந்தார்கள். நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் நிமிர்ந்திடுங்கள்; அல்லாஹ் தங்களை உயர்த்துவானாக! என்று கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள், 'எனக்கு ஒரு கைப்பிடி மண்ணைக் கொடுப்பீராக'! என்று கூறினார்கள். நான் கைப்பிடியளவு மண்ணை நிரப்பி பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடமிருந்து அந்த மண்ணை வாங்கி எதிரிகளின் முகங்களை நோக்கி வீசினார்கள். அதனால் அவர்களின் கண்கள் மண்ணால் நிரம்பின. பின்னர், 'முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் எங்கே?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று பணிவுடன் நான் கூறினேன். அதற்கு, 'அவர்களை அழையுங்கள்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நான் அவர்களை அழைத்ததும், அவர்கள் தங்கள் வாள்களை வலது கைகளில் ஏந்தியவாறு வந்தார்கள்; இணை வைப்பாளர்கள் புறமுதுகிட்டு ஓடிவிட்டனர்.

ஓர் அறிவிப்பில் உள்ளது, மக்கள் ஓடியதும், அதாவது, முஸ்லிம்களின் படையில் பதற்றம் ஏற்பட்டபோது, ஏறத்தாழ நூறு பேர் நபி (ஸல்) அவர்களுடன் இருந்து விட்டார்கள். அந்த நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ وَاِلَيْكَ الْمُشْتَكٰى
وَاَنْتَ الْمُسْتَعَانُ

பொருள்: அல்லாஹ்வே! எல்லாப் புகழும் உனக்கே உரித்தாகும். நாங்கள் உன்னிடமே முறையிடுகின்றோம். உதவிக்காக உன்னையே அழைக்கிறோம்.

அப்பொழுது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குக் கடல் பிரிந்த நாளன்று கற்றுக் கொடுக்கப்பட்ட அதே சொற்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டுள்ளன என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸ் பின் நுஃமான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மக்கள் பாதங்களைத் திருப்பிக் கொண்டு திரும்பிச் சென்ற போது, மாநபி (ஸல்) அவர்களுடன் 100 பேர் மட்டுமே இருந்து விட்டார்கள் என்று நான் கணித்தேன்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அதே நாள், அதாவது, ஹுனைன் போரின்போது, பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உஸ்மான் மற்றும் அலீ (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோர் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ப பத்துக்கும் மேற்பட்ட வாள் வீச்சுகளை செய்தார்கள். ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களும் அவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்ஸாரிகளில் ஹஸ்ரத் அபூ ஸர் துஜானா, ஹாரிஸ் பின் நுஃமான், சஃது பின் உபாதா, அபூ பஷீர், உஸைத் பின் ஹுஸைர் ஆகியோரும், மக்கத்தினரில், ஷீபா பின் உஸ்மான் ஆகியோரும் உறுதியாக நிலை நின்றார்கள்.

பெண்களில் ஹஸ்ரத் உம்மு சுலைம்பின்த் மில்ஹான், உம்மு அம்மாரா, நுஸைபா பின்த் கஅப், உம்மு ஹாரிஸ், உம்மு சுலைம் பின்த் உபைத் ஆகியோரும் போர்க்களத்தில் இருந்தார்கள்.

பெண் சஹாபிகள் உறுதியாக நிலை நின்றது பற்றி வருகிறது;

அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மு சுலைம் பின்த் மில்ஹானைக் கண்டார்கள். அவர்கள் தம் கணவர் அபூ தல்ஹா அவர்களுடன் இருந்தார்கள்.மேலும், அவர்கள் கருவுற்றிருந்தார்கள். ஒட்டகம் தம்மைக் கீழே வீழ்த்திவிடுமோ! என்று அவர்கள் அஞ்சினார்கள். எனவே, அவர்கள் தம் கையைக் கூம்புக்கும் கடிவாளத்திற்குள்ளும் நுழைத்து, ஒட்டகத்தின் தலையைத் தமக்கு அருகில் பிடித்து வைத்திருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், 'இது உம்மு ஸுலைமாவா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் பெற்றோர் தங்களுக்காக அர்ப்பணம் ஆகட்டும்! 'என்று கூறினார்கள். அந்தப் பெண்மணியிடம் ஒரு கத்தி இருந்தது. அப்பொழுது ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர் உம்மு ஸுலைம் ஆவார். இவரிடம் கத்தி உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரிடம் இந்தக் கத்தி எதற்காக? என்று கேட்டார்கள். அதற்கு உம்மு ஸுலைம் அவர்கள், இணைவைப்பவர்களில் யாராவது என் அருகில் வந்தால், நான் அவருடைய வயிற்றைக் கிழித்துவிடுவதற்காக, இதை எடுத்துக்கொண்டேன் என்று கூறினார்கள்.

அந்த விஷயத்தைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள்.

அந்த இக்கட்டான நேரத்தில் நபி (ஸல்) அவர்களுடன் இருந்த ஹஸ்ரத் உம்மு சுலைம் (ரலி) அவர்களுக்கு, மக்கள் நபி (ஸல்) அவர்களைத் தனியாக விட்டுவிட்டு ஓடிவிட்டதனால், எவ்வளவு வருத்தமும், வேதனையும், சினமும் இருந்தது என்றால்,அவர்கள் பெருமானார் (ஸல்)

அவர்கள் மீதுள்ள அன்பில் திளைத்து அன்னாரிடம் இவ்வாறு பணிவுடன் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்குப் பிறகு طُلَقَاء அதாவது, (மன்னித்து)விடப்பட்டவர்கள் வந்து இணைந்து கொண்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ اِذْهَبُوْا أَنْتُمُ الطُّلَقَاءُ என்று கூறி பெரும் கருணை புரிந்த அந்த மக்கா வாழ் மக்களைத்தான் طُلَقَاء என்பது குறிக்கிறது.

அவர்களில் 2000 பேர் ஹுனைன் போரில் கலந்து கொண்டார்கள். மேலும், எதிரிகளின் அம்புகளுக்கு முன்னால் (நிற்க முடியாமல்) ஓடிப்போனார்கள். பழைய சஹாபிகளையும் தள்ளிவிட்டு பின்வாங்குவதற்குக் காரணமாக அமைந்தார்கள். அவர்களைப் பற்றி இதில் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், (உம்மு சுலைம்) அவர்கள் தங்களுடன் இருந்து கொண்டு தோற்று ஓடியவர்களை அதாவது அந்த طُلَقَاء - வைக் கொன்று விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உம்மு ஸூலைமே! நிச்சயமாக அல்லாஹ் எதிரிக்கு எதிரில் போதுமானவனாக இருந்தான். மேலும், அவன் பேரருள் புரிந்துள்ளான் என்று கூறினார்கள். இன்னொரு வீரமான ஸஹாபியா ஹஸ்ரத் அம்மாரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹுனைன் போர் அன்று மக்கள் ஓடிப் போனதும் நாங்கள் நான்கு பெண்கள் இருந்தோம். என்னிடம் வேகமாக வெட்டக்கூடிய வாள் இருந்தது. உம்மு சுலைம் அவர்களிடம் கத்தி இருந்தது. அவர்கள் அந்தக் கத்தியைத் தமது இடுப்புடன் சேர்த்து கட்டி வைத்திருந்தார்கள். மேலும், அவர்கள் கருவுற்றிருந்தார்கள். இவர்கள் போக, ஹஸ்ரத் உம்மு ஸூலைத் மற்றும் உம்மு ஹாரிஸ் ஆகியோரும் இருந்தார்கள். ஓர் அறிவிப்பில் உள்ளது, ஹஸ்ரத் உம்மு அம்மாரா அவர்கள் உரத்த குரல் எழுப்பி, அன்ஸாரிகளே! நீங்கள் ஏன் ஓடுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹவாஸினின் ஒரு மனிதனைப் பார்த்தேன். அவன் கொடியை ஏந்திக் கொண்டு கோதுமை நிற ஒட்டகத்தின் மீது ஏறி முஸ்லிம்களுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருந்தான். நான் அவனுக்கு முன்னால் சென்று, அவனது ஒட்டகங்களின் கால்கள் மீது வாள் வீசினேன். அதன் மீது பயணித்திருந்தவன் முதுகு குப்புற கீழே விழுந்தான். அப்பொழுது நான் அவனைத் தாக்கினேன். மேலும், அவனை மரண உறக்கத்தில் ஆழ்த்தும் வரை அவன் மீது வாள் வீசிக் கொண்டே இருந்தேன். பிறகு, நான் அவனது வாளை எடுத்துக் கொண்டேன். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தமது வாளை ஏந்திக் கொண்டு போர்க்களத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு சென்றடைந்தேன். அன்னார் (ஸல்) சூரா பக்ராவின் தோழர்களே! என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, அன்ஸாரிகள் தாக்குதல் தொடுத்த வண்ணம் திரும்பி வந்தார்கள். மேலும், ஒட்டகத்திடமிருந்து பால் கரக்கும் அளவு நேரம் மட்டுமே ஹவாஸின் மக்கள் சஹாபிகளுக்கு முன்னால் நின்றார்கள். அதாவது, கொஞ்ச நேரம்தான் அவர்களால் எதிர்த்துப் போரிட முடிந்தது. பிறகு, அந்த எதிரிகள் தோற்று ஓடிப் போனார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் எதிரி இவ்வளவு இழிவான தோல்வி அடைந்ததை அதற்கு முன் ஒருபோதும் கண்டதில்லை. அவர்கள் முகத்தைத் தூக்கிக் கொண்டு எல்லாப் பக்கமும் ஓடிக் கொண்டிருந்தார்கள். என் மகன் ஹபீப் மற்றும் அப்துல்லாஹ் ஆகியோர் என்னிடம் திரும்பி வந்தார்கள். அவர்களுடைய கைகளில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ பஷீர் மஃஸனீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுனைன் நாளன்று நாங்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுதோம்; பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களை நிற்க வைத்த அந்த இடத்தை அடைந்தோம். நாங்கள் அறிந்திருக்கவில்லை, சூரியன் உதிக்க இருந்தது. திடீரென்று எங்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எங்களது படையின் முன்பக்கம் தோல்வி அடைந்த நிலையில் எங்களை நோக்கி திரும்பி வந்தது. எங்களது அணிகள் சிதறிப் போயின. மேலும், நாங்கள் படையின் முன்பக்கத்துடன் சேர்ந்து தோல்வியைத் தழுவினோம். நான் திரும்பி முன்னால் சென்றேன். இளைஞனாக இருந்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படையின் முன்பக்கம் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. அப்பொழுது நான், அன்ஸாரிகளே! என் தாய் தந்தையர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணமாவார்களாக! நீங்கள் எங்கே ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டேன். இவ்வாறு அவர்கள் குரல் கொடுத்தார்கள். நான் தோற்ற மக்களைப் பின்னால் திருப்பிக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமுடன் இருப்பதைப் பார்க்க வேண்டும் என்பது மட்டுமே எனது முயற்சியாக இருந்தது. எதுவரை என்றால், நான் பெருமானார் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்து விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள், அன்ஸாரிகளே! அன்ஸாரிகளே! என்று கூறிக் கொண்டிருந்தார்கள். நான் அன்னாரது பயண விலங்குக்கு அருகில் சென்றேன். நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன், அன்ஸாரிகள் உடனடியாக திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மேலும், மாநபி (ஸல்) அவர்கள் தமது பயண விலங்கின் மீது எதிரிக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். அன்ஸாரிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டு போரிடத் தொடங்கினர். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கூடவே இருந்தார்கள்.

ஆக, அன்ஸாரிகள் எதிரிகளைத் தொலைவில் விலக்கி விட்டுக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால், நாங்கள் அவர்களை ஒரு ஃபர்ஸஃஹ், அதாவது, மூன்று மைல் தூரம் வரை தள்ளிக் கொண்டு போய் விட்டோம். அவர்கள் புதர்களில் பரவி விட்டார்கள். எதுவரையெனில், அவர்கள் எங்களுக்கு முன்னால் தோல்வியைத் தழுவினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது தங்குமிடத்தின் பக்கம், தமது கூடாரத்தை நோக்கி திரும்பி வந்து விட்டார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்கள் அன்னாருக்கு அக்கம்பக்கம் பிணைக்கப்பட்டிருந்தார்கள். ஒரு கூட்டம் பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்தைச் சுற்றி இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களுடன் அன்னாருடைய தூய துணைவியார்களான ஹஸ்ரத் உம்மு சலமா மற்றும் ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹூ அன்ஹூமா) ஆகிய இருவர் இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மு ஸலமா மற்றும் ஹஸ்ரத் மைமூனா (ரலியல்லாஹூ அன்ஹூமா) ஆகியோர் இருந்ததாக ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அவர்களைச் சுற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் காவல் காத்துக் கொண்டிருந்த மக்களின் கூட்டம் இருந்தது. மேலும், அவர்கள் இபாத் பின் பிஷ்ர், அபூநாயிலா மற்றும் முஹம்மத் பின் மஸ்லமா ஆகியோர் ஆவர்.

இப்னு உக்பா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு குறைஷி மனிதர் சஃப்வான் பின் உமய்யாவைக் கடந்து சென்றார். அதுவரை இணைவைப்பாளராகவே அவர் இருந்தார். ஹுனைன் போரை நேரில் காண உடன் வந்திருந்தார். உங்களுக்கு நற்செய்தி! முஹம்மத் (ஸல்) அவர்களும், அவர்களது தோழர்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்' என்று அவர் கூறினார். முதலில் நடந்த தாக்குதலின் காரணமாக அவர் இந்தத் தோல்வியைப் பற்றிய தகவல் தெரிவித்தார். பின்னர் அந்த இணைவைப்பாளர், இறைவன் மீது ஆணையாக! இனி அவர்களால் ஒருபோதும் தமது முந்தைய நிலைக்குத் திரும்ப முடியாது என்று கூறினார்.அதாவது, இனி அவர்கள் வெற்றி பெற முடியாது என்று கூறினார். அதற்கு ஸஃப்வான், நீ என்னிடம் காட்டரபிகள் ஆதிக்கம் பெறுவது குறித்த நற்செய்தியைக் கூறுகிறாயா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! காட்டரபிகள் தலைவராக ஆகுவதை விட குறைஷி ஒருவர் தலைவராக ஆகுவது, எனக்கு மிகவும் பிரியமானது என்று கூறினார்கள்.

ஸஃப்வான் எதிரி கூறியதைக் கேட்டு சினங்கொண்டார்கள். அவர்கள் தம் அடிமை ஒருவரை, இது யாருடைய கவிதையின் குரல் வருகிறது என்று கவனமாகக் கேள்! என்று செய்தி கொண்டு வரச்சொல்லி அனுப்பினார்கள். ஏனென்றால், அப்பொழுது

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

முழக்கமிடும் சத்தமும் ஆரம்பமாகியிருந்தது. அவர் அவர்களிடம் திரும்பி வந்து, பனூ அப்திர் ரஹ்மானே! பனூ உபைதில்லாஹ்வே! பனூ அப்தில்லாஹ்வே! என்று அவர்கள் கூறுவதை நான் கேட்டேன் என்று கூறினார். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆதிக்கம் பெற்று விட்டார்கள். மேலும், இது போரில் அவர்களின் அடையாளம் ஆகும் என்று கூறினார். இதனால் ஸஃப்வானுக்குத் திருப்தி ஏற்பட்டது. முஹம்மத் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது என்று அவர் கூறலானார்.

இந்தப் போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காஃபிர்கள் மீது கூழாங்கற்களை எறிந்தது மற்றும் துஆ செய்தது பற்றியும் குறிப்பு கிடைக்கிறது. இது குறித்து முதலில் கூறப்பட்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள், எனக்கு மண்ணைக் கொடுங்கள்; நான் வீசுகிறேன் என்று கூறியிருந்தார்கள். அதன் மேற்கொண்ட விவரத்தில்

ஓரிடத்தில் இவ்வாறு உள்ளது: ஸஹாபிகள் திரும்பி வந்ததும் போர் தனது உச்சத்தில் இருந்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்த வண்ணம் பார்வையை உயர்த்தி போரைப் பார்வையிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், போர் மிகவும் உச்சத்தில் உள்ளது என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூழாங்கற்களை எடுத்து அவற்றைக் காஃபிர்களின் முகங்களை நோக்கி எறிந்தார்கள். பிறகு கூறினார்கள்:

முஹம்மதின் இறைவன் மீது ஆணையாக! பிறிதோர் அறிவிப்பில் உள்ளது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கஅபாவின் இறைவன் மீது ஆணையாக!; இந்த மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பார்த்தபோது, நான் பார்த்தது போன்றே போர் நடந்து கொண்டிருந்தது. அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்கள் கூழாங்கற்களை எறிந்ததும், அந்த மக்களின் வேகம் தொய்வடைந்ததை நான் கண்டேன். அதாவது, எதிரியின் தாக்குதல் மந்தமானது. மேலும், அவர்களது விவகாரம் திரும்பியது. அதாவது, விவகாரம் தோல்வியின் பக்கம் திரும்பி விட்டது. எதிரிக்குத் தோல்வி ஏற்பட்டது.இதன் மேற்கொண்ட விவரம் இவ்வாறு கிடைக்கிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்தபோது, பாதங்கள் வைக்கும் இரண்டு பகுதிகளிலும் பாதங்களை வைத்து எழுந்து நின்று விட்டார்கள். அன்னார் (ஸல்) தம்முடைய கைகளை உயர்த்தி துஆ செய்தவாறு இவ்வாறு கூறலானார்கள்:

اَللّٰهُمَّ اِنِّىٓ اَنْشُدُكَ مَا وَعَدْتَنِى اَللّٰهُمَّ لَا يَنْبَغِى لَهُمْ اَنْ يَظْهَرُوْا عَلَيْنَا

பொருள்: அல்லாஹ்வே! நீ என்னிடம் வாக்களித்திருந்ததை நான் உனக்கு முன்னால் வைத்து கூறுகிறேன். அல்லாஹ்வே! அவர்கள் எங்கள் மீது மேலோங்குவதும், நாங்கள் தோல்வியடைந்து விடுவதும் பொருத்தமானதல்ல.

யஸீத் பின் ஆமிர் சவாஈ அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர்கள் ஹுனைனில் இணைவைப்பாளர்களுடன் இருந்தார்கள். பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுனைன் போரின்போது, நிலத்திலிருந்து ஒரு கைப்பிடி அளவு மண்ணை எடுத்தார்கள். பிறகு, இணைவைப்பாளர்கள் பக்கம் திரும்பி, அவர்களுடைய முகங்களை நோக்கி எறிந்து விட்டார்கள்; மேலும், நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள்! என்று கூறினார்கள். முகங்கள் கருகிவிட்டன. எவர் தன் சகோதரரை சந்திப்பாரோ அவர் அவரிடம் தன் கண்கள் எரிகின்றன என்று முறையிடுவார்; மேலும் தன் கண்களைத் தேய்த்துக் கொண்டிருப்பார். அதாவது, எதிரிகளின் கண்களில் எரிச்சல் எடுக்க ஆரம்பித்து விட்டது. அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் தல்தல் எனப்படும் கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்தார்கள். ஷீபா பின் உஸ்மான் ஒரு கண்ணியத்திற்குரிய குறைஷிய மனிதராக இருந்தார். அவருடைய தகப்பன் உஸ்மான் பின் தல்ஹா உஹூது போரில் கொல்லப்பட்டான். இவர் மக்காவிலிருந்து ஹுனைன் படையில் கலந்து கொண்டார். சிலரது பார்வையில், இவர் மக்கா வெற்றியின்போது முஸ்லிம் ஆகியிருந்தார்.

அவரே கூறுகிறார்: நான் எந்த எண்ணத்தில் கலந்து கொண்டேன் என்றால், இதன் பொருள் அவர் முஸ்லிம் ஆகியிருக்கவில்லை. அவர் கூறுகிறார்: எனக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைத்தாலும் நான் என் தந்தை கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் விதமாக, நவூதுபில்லாஹ்! ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொன்று, எனது மனதைக் குளிர வைத்துக் கொள்வேன் என்று நினைத்திருந்தேன். இஸ்லாத்துடனான எதிர்ப்பின் நிலை எப்படி இருந்தது என்றால், இவர், முழு அரேபியாவும் அரபு அல்லாத மற்ற நாடுகளும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கலிமாவைக் கூறினாலும், அப்பொழுதும் நான் அவர்களைப் பின்பற்ற மாட்டேன் என்று கூறி வந்தார். முஸ்லிம்கள் போர்க்களத்திலிருந்து ஓடி விட்டனர்; ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சில மக்களுக்கு நடுவில் இருக்கிறார்கள் என்பதை ஷீபா பார்த்ததும், அவர் எடுத்துக் கூறுகிறார்: நான் பெருமானார் (ஸல்) அவர்களைக் கொல்வதற்கு எனக்கு இப்பொழுது நல்ல சந்தர்ப்பம் என்று கருதினேன். நவூதுபில்லாஹ்! அவர் கூறுகிறார்:

நான் அன்னாருக்கு வலது பக்கமாக அன்னார் மீது தாக்குதல் தொடுக்க முன்னால் சென்றேன். அப்பொழுது நான் அங்கு அன்னாருடைய சிறிய தந்தையார் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் நிற்பதைக் கண்டேன். அப்பொழுது நான் அப்பாஸ் அவர்கள் இருக்கும்போது, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பது சாத்தியமில்லை என்று கருதினேன். எனவே, நான் திரும்பிச் சென்றேன்.

பிறகு, நான் பெருமானார் (ஸல்) அவர்களின் இடது பக்கமாக, அங்கிருந்து தாக்குதல் தொடுக்கலாம் என வந்தேன். அங்கு அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்கள் நிற்பதைக் கண்டேன். எனவே, அங்கிருந்து திரும்பி வந்து விட்டேன். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களின் பின்பக்கமாக வந்து அன்னார் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று எண்ணினேன். தாக்குதல் தொடுக்கும் எண்ணத்தில் முன்னால் சென்ற போது, என் கண்களில் கை வைத்துக் கொண்டு பாதங்களைத் திருப்பி வேகமாக திரும்பி வந்து விட்டேன். பிற்காலத்தில் அவர் கூறி வந்தார்: சரியாக அந்த நேரத்தில் எனக்குத் தீப்பிழம்புகள் பறப்பது தென்பட்டது. அந்தத் தீப்பிழம்புகள் என்னை எரித்து சாம்பலாக்கி விடும் என்பது போன்று இருந்தது. அதே நேரத்தில், மாநபி (ஸல்) அவர்கள், ஷீபா எனக்கு அருகில் வா! என்று குரல் கொடுத்தார்கள். இவர் பின்னால் நிற்கிறார் என்பது பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்து விட்டிருந்தது.

அவர் கூறுகிறார்: நான் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றேன். அன்னார் புன்சிரித்தார்கள். மேலும், எனது நெஞ்சில் தமது அருளுக்குரிய கைகளைத் தடவினார்கள். மேலும், اَللّٰهُمَّ اذْهَبْ عَنْهُ الشَّيْطَان என்று துஆ செய்தார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! ஷைத்தானை அவரை விட்டு விலக்கிவிடுவாயாக!

ஷீபா கூறுகிறார்: இறைவன் மீது ஆணையாக! அந்தக் கணமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு என்னுடைய காதுகள், என்னுடைய கண்கள் மற்றும் எனது உயிரை விடவும் மிகவும் அன்பிற்குரியவர்கள் ஆகி விட்டார்கள். மேலும், எனது இதயம் தூய்மையாகி விட்டது.

மேலும், ஷீபாவே! காஃபிர்களோடு போர் புரிவீராக! என்று ஷீபாவிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் கூறுகிறார்: இப்பொழுது நான் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தற்காத்தவாறு எதிரிகளின் பக்கம் வாளை எடுத்துக் கொண்டு முன்னால் சென்றேன். மாநபி (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில் எப்படி போர் செய்யத் துவங்கினேன் என்றால், அந்த நேரத்தில் என் தந்தை எனக்கு முன்னால் வந்திருந்தால் கூட அவரையும் கொன்றிருப்பேன்.

இந்த நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தமது கோணத்தில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஒரு நிகழ்வு வருகிறது. ஒருவர் வெளிப்படையில், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் ஹுனைன் போரில் கலந்து கொண்டார். ஆனால், அவருடைய

எண்ணம் என்னவாக இருந்தது என்றால், அந்தப் படைகள் ஒன்றுடன் ஒன்று மோதும் தருணத்தில் நான் சந்தர்ப்பம் பார்த்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஷஹீத் ஆக்கி விடுவேன் என்று நினைத்திருந்தார். போர் துரிதமான போது, அந்த நபர் வாளை உருவிக் கொண்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த நேரத்தில் தனியாக இருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் மட்டுமே உடன் இருந்தார்கள். அந்த நபர் இதை பொன்னான தருணமாகக் கருதினார். மேலும், முன்னேறி வாள் வீச விரும்பினார். வல்ல இறைவன் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்கு அந்த நபருக்குள், விரோதம், அதாவது, பகைமை இருக்கிறது என்று இல்ஹாம் மூலமாகத் தெரிவித்து விட்டான். அந்த நபர் தானே கூறுகிறார்: நான் அன்னாரை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டே இருந்தேன். மேலும், இப்பொழுது எனது வாள் அன்னாரது தலையை சீவி விடும்! என்று நான் நினைத்து வந்தேன். நவூதுபில்லாஹ்!

ஆனால், நான் அன்னாருக்கு அருகில் சென்றடைந்ததும், அன்னார் (ஸல்) தமது கையை என் பக்கம் கொண்டு வந்து, எனது நெஞ்சின் மீது வைத்து, இறைவா! நீ இவருக்கு ஷைத்தானிய சிந்தனைகளில் இருந்து விடுதலை அளிப்பாயாக! இவரது உள்ளப் பகைமையை அகற்றி விடுவாயாக! என்று கூறினார்கள். அந்த நபர் கூறுகிறார்: எனக்கு உடனடியாக அன்னாரை விட அன்பிற்குரிய விஷயம் எதுவும் இல்லை என்பது போன்று தோன்றியது.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், முன்னோக்கி செல்லுங்கள்; போரிடுங்கள் என்று கூறினார்கள். நான் வாளை ஏந்திக் கொண்டேன். இறைவன் மீது ஆணையாக! அப்பொழுது என் தந்தையும் உயிருடன் இருந்து எனக்கு முன்னால் வந்திருந்தால், நான் எனது வாளை அவரது நெஞ்சிலும் இறக்கியிருப்பேன். அதாவது, குத்தியிருப்பேன். அதற்கும் தயங்கியிருக்க மாட்டேன். இந்த அன்பு அவரது பகைமையை அகற்றி விட்டது. அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களின் அன்பு அவரது பகைமையை முடிவுக்கு கொண்டு வந்து விட்டது. போர் முடிந்த பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கூடாரத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஷீபா பின் உஸ்மான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்ப்பதற்காகவும், அன்னாரைச் சந்திப்பதற்காகவும் ஆஜரானார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், ஷீபாவே! நீர் அப்பொழுது என்ன யோசித்துக் கொண்டிருந்தீரோ அதைவிடச் சிறந்தது அல்லாஹ் இப்பொழுது உமக்கு நிர்ணயித்திருப்பதாகும் என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷீபாவிடம், போர்க்களத்தில் அவரது உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த அந்த அனைத்து விஷயங்களையும் கூறி விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், இறந்த காலத்தில் என்ன நடந்ததோ அதற்காக பாவமன்னிப்புக்காக ஷீபா கேட்டுக் கொண்டார். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு துஆவை வழங்கியவாறு, . غَفَرَ اللّٰهُ لَكَ என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ் உமக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக!

இவ்வாறே நுஸைர் பின் ஹாரிஸின் கெட்ட எண்ணம் மற்றும் அவரது நல்ல முடிவு பற்றிய குறிப்பும் கிடைக்கிறது. மக்காவிலிருந்து எந்த மக்கள் தீய நிய்யத்துடன், கெட்ட எண்ணத்துடன் ஹுனைன் படையில் இணைந்திருந்தார்களோ அவர்களில் நுஸைர் பின் ஹாரிஸும் ஒருவர் ஆவார். இவர் குறைஷியர்களின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இவருடைய சகோதரர் பத்ர் யுத்தத்தில் கொல்லப்பட்டிருந்தார். இவரே எடுத்துரைக்கிறார்: நான் சந்தர்ப்பம் கிடைத்த உடனேயே இணைவைப்பாளர்கள் தரப்பிலிருந்து தாக்குதல் தொடுப்பவர்களுடன் கலந்து கொள்ளலாம் என்ற நிய்யத்தில், என் கூட்டாளிகள் சிலருடன் சேர்ந்து, ஹுனைனை நோக்கி புறப்பட்டேன். முஸ்லிம்கள் துவக்கத்தில் சிதறுண்டு போன போது, நான் நவூதுபில்லாஹ்! நபி (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக அன்னாரை நோக்கிச் சென்றேன். ஆனால், நான் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி முன்னேற நினைத்த உடனேயே, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அக்கம் பக்கம் வெள்ளை நிற முகத்தை உடைய மக்கள் சிலர் இருப்பதையும், அவர்கள் என்னிடம், இங்கிருந்து தூர விலகிவிடு ! என்று கூறுவதையும் பார்த்தேன். அவர்களுடைய குரலில் எந்த அளவுக்கு அச்சுறுத்தல் இருந்தது என்றால், நான் பயந்து போனேன். நான் நடுங்க ஆரம்பித்து விட்டேன். கொஞ்ச நேரம்தான் ஆகியிருக்கும், முஸ்லிம்கள் மீண்டும் ஒன்று திரளத் துவங்கி விட்டார்கள். மேலும், எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்கத் துவங்கி விட்டார்கள். அப்பொழுது நான் அங்கிருந்து திரும்பி வந்து, மரங்களில் ஒளிந்து கொண்டேன். பல நாள்கள் ஒளிந்திருந்தேன். ஏனென்றால், நான் என்ன பார்த்தேனோ அதன் மீதான திகில் என்னை விட்டு விலகவில்லை. எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாயிஃப் பக்கம் சென்று விட்டார்கள் என்று எனக்குத் தெரிய வந்தது. பிறகு, அங்கிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஜுஃரானாவுக்குச் சென்று விட்டார்கள். போர் முடிந்த பிறகோ, இப்பொழுது இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்து விட்டது; அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்; நானும் பெருமானார் (ஸல்) அவர்கள் முன் ஆஜராகி விடுகிறேன் என்று நினைத்தேன். எனவே, நான் ஒளிந்து மறைந்து ஜுஃரானவுக்குச் சென்று விட்டேன். முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டார்கள். மேலும், நுஸைர் நீயா? என்று கேட்டார்கள். ஆம்! ஹுஸூர் நான் ஆஜராகியுள்ளேன் என்று நான் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள், நீ ஹுனைன் போரின்போது (செய்ய) நினைத்ததை விட இது உனக்குச் சிறந்ததாகும். இதில் அல்லாஹ் உனக்கும் அதற்கும் நடுவில் வந்து விட்டான். அதாவது, உனது எண்ணத்துக்கும் உனக்கும் நடுவில் வந்து விட்டான் என்று கூறினார்கள்.

நுஸைர் அறிவிக்கிறார்கள்: நான் இந்த விஷயத்தைக் கேட்டதும் வேகமாக ஹுஸூர் (ஸல்) அவர்களை நோக்கிச் சென்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியது வேறு எதுவும் இருந்திருந்தால், அது எனக்கு ஏதாவது பலனளித்திருக்கும் என்று பணிவுடன் கூறினேன்.

மேலும்,இவர் ஷஹாதத் கலிமாவைக் கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மாநபி (ஸல்) அவர்கள் இவருக்காக துஆ செய்தவாறு اَللّٰهُمَّ زِدْهُ ثَبَاتًا என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! இவரை உறுதியாக நிலைத்து நிற்பதில் முன்னேறச் செய்வாயாக!” என்று கூறினார்கள். நுஸைர் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த துஆவின் மூலமாக எனது உள்ளம் உறுதியாக நிலைத்து நிற்றல் என்ற வகையில் பாறையைப் போன்று ஆகி விட்டது. இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவருக்கு நேர்வழியை வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! என்று கூறினார்கள்.

ஹுனைன் போருக்குப் பிறகு போர்ச் செல்வங்களை விநியோகித்தவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் புதிதாக முஸ்லிம் ஆகியிருந்த சில குறைஷிய தலைவர்களுக்கு உள்ளங்களை மகிழ்ச்சியடைய செய்வதற்காக 100, 100 ஒட்டகங்களை வழங்கினார்கள். அவர்களில் இந்த நுஸைர் பின் ஹாரிஸும் ஒருவர் ஆவார். இவர் எத்தகைய சுய கட்டுப்பாட்டை வெளிப்படுத்தினார் என்றால், உண்மையில், மாநபி (ஸல்) அவர்கள் இவருக்கு ஈமானின் உறுதிப்பாடு கிடைப்பதற்காக செய்த துஆவின் விளைவாக அது இருந்தது. அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு 100 ஒட்டகங்களை வழங்குவதாக அறிவித்துள்ளார்கள்; எனவே, அந்த ஒட்டகங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்ற செய்தியை இவருக்குத் தெரிவிப்பதற்காக ஒரு நபர் வந்தார். அதைக் கேட்ட நுஸைர் அவரிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ உள்ளங்களை

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

மகிழ்விப்பதற்காக இதை வழங்குகிறார்கள். எனவே, நான் இந்த ஒட்டகங்களைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்.அதாவது, நானோ அல்லாஹ்வின் அருளால் இஸ்லாத்தில் உறுதியாக நிலைத்து நிற்கிறேன். மனமகிழ்ச்சிக்காக இத்தகைய பொருளை வாங்குவதற்கு எனக்குத் தேவையில்லை என்று கூறினார்.

பிறகு, தாமே பின்னர் இவ்வாறு கூறலானார்: நான் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து நானாக இந்தப் பொருளைக் கேட்கவுமில்லை; வழங்குமாறு கோரவுமில்லை. இதுவோ பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பான அன்பளிப்பும் பரிசும் ஆகும். எனவே, இதை மறுக்கக்கூடாது. இதனால் இவர் இந்தச் செய்தியைக் கொண்டு வந்தவருக்கு அந்த ஒட்டகங்களில் 10 ஒட்டகங்களை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். மற்றவற்றைப் தாம் வைத்துக் கொண்டார்.பிற்காலத்தில் பெரும்பாலும் இந்தவொரு விஷயத்தை வெளிப்படுத்தி வந்தார்: அல்லாஹ்வுக்கு நன்றி! எங்கள் மூதாதையர்கள் இருந்த அந்த இணைவைப்பில் நாங்கள் மரணிக்கவில்லை. இவரது இஸ்லாம் மிகவும் நன்றாக இருந்தது. இவர் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்குச் சென்று விட்டார். பிறகு, அங்கிருந்து ஜிஹாது செய்யும் நோக்கத்தில் சிரியாவை நோக்கிச் சென்று விட்டார். மேலும், ஹிஜ்ரீ 15 ஆம் ஆண்டு யர்மூக் போரில் ஷஹீதானார். மீதமுள்ளவை பின்னர் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்!(அல் ஃபஸ்ல் இன்டர் நேஷனல், செப்டம்பர் 26, 2025, பக்கம் 2 - 7)

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி...(மல்ஃபூஸாத்.......)**

சில எதிரிகள் நமது நண்பர்களுடன் கடுமையாக நடந்து கொள்கின்றார்கள். மேலும் அவர்களுக்கு துன்பங்கள் கொடுக்கின்றார்கள். இதைப் பற்றி குறிப்பிட்டவாறு தமது நண்பர்களுக்கு மென்மை மன்னிப்பு மற்றும் தீங்குகளில் இருந்து தப்பித்தல் தொடர்பாக அறிவுறுத்தியவாறு அவர்கள் கூறினார்கள்:

எதிரிகளுக்கு எதிரில் உணர்ச்சிவசப்படக் கூடாது குறிப்பாக எவர்கள் இளைஞர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு நான் இந்த அறிவுரையை செய்கின்றேன். நீங்கள் விரைவாக என்னிடம் வாருங்கள்! நீங்கள் எனக்குப் பிறகு எவ்வளவு காலம் உயிர் வாழ்வீர்கள் என்பது எனக்கு தெரியாது: அருகில் வசிப்பது மிகவும் பயனுள்ளதாகும். மனிதன் இறைவன் முன் நிற்பது போன்று தன்னை ஆக்கிக் கொண்டால், பின்னர் அவன் இறைப் பண்புகளின் வெளிப்பாடாக இருப்பான்.அருகில் இருக்கக்கூடிய மனிதன் ஏராளமான விஷயங்களை பார்த்தும் விடுகின்றான் : மேலும் கற்றுக் கொண்டும் விடுகின்றான்.(மல்பூஸாத் தொகுதி 2, பக்கம் 91-92, காதியான் பதிப்பு.2018)

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர்.......)**

தண்ணீரிலிருந்து பேரீத்தம் பழங்களும், திராட்சைப் பழங்களும், இதர கனிகளும் விளைகின்றனவோ அதே போல புதிதாக இறங்கக் கூடிய ஆன்மிகத் தண்ணீரிலிருந்தும் வகை வகையான உயர் தரமான கனிகளும் விளைந்து கொண்டிருக்கும். இந்த கனிகளிலிருந்து சிலவற்றை நீங்கள் உண்கின்றீர்கள். சிலவற்றை நீங்கள் வேறு பணிகளுக்காக பயன்படுத்துகின்றீர்கள். உதாரணமாக, ஸீனாய் மலையிலிருந்து விளையக் கூடிய அந்த மரத்தின் கனியும் இருக்கின்றது. அதில் எண்ணெயும் காணப்படுகிறது. மேலும் உண்பவர்களுக்கு அது குழம்பாகவும் பயன்படுகிறது. அதாவது ஆலிவ் மரம்.

இஸ்லாத்தின் மறுமலர்ச்சி தொடர்பாக எடுத்துரைக்கப்படுகின்ற அந்த கருத்தின் பக்கம் இந்த வசனங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த கருத்து கூறப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் இஸ்லாத்தை கனிகளற்ற ஒரு தோட்டமாக கருதாதீர்கள். இன்னும் கூறப்போனால், நினைவிற் கொள்ளுங்கள்! இது எப்படிப்பட்ட தோட்டம் என்றால், இது எல்லாக் காலத்திலும் தனது புத்தம் புதிய கனிகளை மக்களுக்கு உண்ணக் கொடுத்துக் கொண்டே இருக்கும். இஸ்லாத்தில் எப்போதெல்லாம் ஏதாவது ஒரு சீர் கேடு நிகழுமோ அதனை அகற்றுவதற்காக முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஏதாவது ஓர் அடிமை, அன்னாருடைய ஆன்மிகத்தில் கனியாகவே இருக்கக் கூடிய ஒருவர் அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றி அந்த சீர்கேட்டை அகற்றி விடுவார். ஆக அற்புதங்களும் அடையாளங்களும் நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் உலகின் தற்போதைய காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு சவால் விடுத்தவாறு பாரசீக கவிதையில் கூறினார்கள். அதன் பொருள். இக்காலத்தில் அற்புதங்கள் மற்றும் அடையாளங்களுக்கான எந்த உதாரணமும் கிடைக்கவில்லை என்றால், பின்னர் வாருங்கள்! முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைகளிடமிருந்து அந்த அற்புதங்களை கண்டு கொள்ளுங்கள். இந்த அருட்கொடையை குறிப்பிட்டவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:-

إِنَّ اللهَ يَبْعَثُ لِهٰذِهِ الْأُمَّةِ عَلٰى رَأْسِ كُلِّ مِائَةِ سَنَةٍ
مَنْ يُجَدِّدُ لَهَا دِيْنَهَا

( அபூதாவூத், தொகுதி 2, பக்கம் - 241)

பொருள்: அல்லாஹ் எனது சமுதாயத்தில் ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்திலும் காலத்தின் மாற்றத்தால் மக்களுக்கு முன்னால் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கும் அந்த சீர்கேடுகளை அகற்றக் கூடிய அந்த சீர்திருத்த வாதிகளை எழுப்பிக் கொண்டே இருப்பான்.

( தஃப்ஸீரே கபீர் 6, 151. 2010-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * * *

**12-ம் பக்கத் தொடர்ச்சி...**
**( இறை வழியில் பொருள் தியாகம்......)**

வெளியீடு)

கண்ணியத்திற்குரிய செவியேற்போரே! மிகவும் இக்கட்டான, சிரமமான சூழ்நிலையில், உள்ளத்தின் உணர்வுகளை அர்ப்பணித்தவாறு, இறைவழியில் தியாகம் செய்வது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. இதற்கான எண்ணற்ற முன்மாதிரிகள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஆங்காங்கே பொலிவுற்ற வண்ணம் தென்படுகின்றன. பேஷாவரைச் சேர்ந்த ஹஸ்ரத் காஸீ முஹம்மத் யூஸுஃப் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒரு சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்தார்கள்:

வஸீராபாத் உடைய ஷேக் குடும்பத்தின் ஓர் இளைஞர் மரணித்து விட்டார். அவருடைய தந்தை கஃபன் துணிக்காக 200 ரூபாய் வைத்திருந்தார்கள்.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் லங்கர்கானாவின் செலவுகளுக்காக அறிவித்தார்கள். இவர்களுக்கும் கடிதம் சென்றது. அப்போது இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தொகையை அனுப்பி வைத்த போது இவ்வாறு எழுதினார்கள்:

...என்னுடைய இளமைப் பருவ மகன் பிளேக் நோயினால் மரணித்துவிட்டான். நான் அவனது கஃபனுக்காகவும் நல்லடக்கத்திற்காகவும் 200 ரூபாய் வைத்திருந்தேன். அதைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். மகனை அவனது ஆடையிலேயே நல்லடக்கம் செய்கிறேன்.

(ஸஹுர் அஹ்மத் இதழ், பக்கம் 70 - 71 - ஜனவரி 30, 1955வெளியீடு)

ஹஸ்ரத் யாகூப் அலீ இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

எனக்கு அந்தக் காட்சி மறப்பதில்லை! என்னால் மறக்கவும் முடியாது! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து அப்போது சில மாதங்கள் தான் கழிந்திருக்கும்! ஒரு நாள் வெளியிலிருந்து என்னை யாரோ ஒருவர் குரல் கொடுத்து அழைத்தார். பணிப்பெண்ணோ அல்லது யாரோ ஒரு சிறுவரோ, கதவருகே நிற்கின்றார்; அவர் தங்களை அழைக்கின்றார் என்று கூறினார்கள். நான் வெளியே வந்தேன். அப்போது மர்ஹூம் ஹஸ்ரத் முன்ஷீ முஹம்மத் அரூடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு முன்னால் வந்து, என்னுடன் கைகுலுக்கினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தமது பையிலிருந்து 2 -3 பவுண்ட் எடுத்துக் கொடுத்து இதை அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

**(தொடரும்...)**

தமிழாக்கம்
முரப்பி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

# ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபிகளின் வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் பொருள் தியாகத்தின் முக்கியத்துவம்

(மதிப்பிற்குரிய மவ்லானா ரஃபீக் அஹ்மத் பேக் ஸாஹிப், நாஸிர் பைத்துல் மால் காதியான்)

சொற்பொழிவு காதியான் ஜல்ஸா ஸாலானா - 2022

அல்லாஹ் திருக்குர்ஆனில் பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் தொடர்பாக எடுத்துரைத்தவாறு கூறுகிறான்:

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿۲۶۲﴾

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۢ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۲۶۶﴾

பொருள்:

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ், தான் நாடியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனும் ஆவான்.

தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்திகளைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம், உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்றபோது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகின்றது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும், மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான்.(அதிகாரம் அல் பக்கரா: வசனங்கள் 262 - 266)

அல்லாஹ் இவ்விரு திருவசனங்களிலும் மிகத் தெளிவான முறையில் இவ்வாறு கூறியிருக்கிறான்: அல்லாஹ்வின் வழியில் பொருள் செலவு செய்பவர் ஒருபோதும் பொருள் செலவு செய்வதனால் வீண்போவதுமில்லை; நஷ்டமடைவதுமில்லை. மாறாக, அவரது பொருளில் அசராதாரணமான செழிப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஒரு தானியம் பூமியில் விதைக்கப்படுவதன் மூலமாக அதன் 7 கதிர்கள் முளைக்கின்றன. ஒவ்வொரு கதிரிலும் 100 தானியங்கள் இருந்தால், 7 கதிர்களிலிருந்து 700 தானியங்கள் வெளிவருகின்றன. இன்னும் சொல்வதென்றால், அல்லாஹ் நாடினால் அதைவிட அதிகம் வெளிவர முடியும். மேலும், ஒரு தானியத்தில் இருந்து பலநூறு தானியங்களை எடுக்க முடியும் என்பது தற்போதைய அறிவியல் காலகட்டத்தில் நிரூபணமாகிவிட்டது.

ஆக, அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு, நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்பிய வண்ணம் எந்த நல்ல பணியில் பொருள் செலவு செய்தாலும் உங்கள் செல்வமும் குறையாது; தோட்டங்களும் ஒருபோதும் வீண் போகாது; வாணிபமும் சோடைபோகாது; நீங்கள் இழப்படையவும் மாட்டீர்கள்; மாறாக, ஒவ்வொரு பணியிலும் அசாதாரணமான பரக்கத்துகள் கிடைக்கப்பெறும் என்று நம்பிக்கையூட்டுகிறான்.

இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் மக்களே! இறைவனை (உண்மையாக) நேசிப்பவர்கள் ஆவார்கள்.

அந்த அன்பிற்குரியவன் எப்போது திருப்தி அடைவானோ என்ற இந்தக் கவலையிலேயே அவர்கள் இரவு பகலாக மூழ்கி இருக்கிறார்கள்.

செல்வத்தையும் ஆன்மாவையும் மீண்டும் மீண்டும் அவனுக்குக் கொடுத்துவிட்டோம். (நாம்) தகுதியற்றவர்கள் என்ற அச்சமே (அவர்களின்) உள்ளத்தில் இருக்கிறது.(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகள்)

கண்ணியத்திற்குரிய செவியேற்போரே! ஆரம்ப காலகட்டத்தின் நம்பிக்கையாளர்கள் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்தவாறு, இந்த இரண்டு வசனங்களிலும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள அந்த அருள்களிலிருந்து பயனடையந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) தமது நிகரற்ற தியாகங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் அளவற்ற அன்பு நேசத்தின் மூலம் இறைவனுக்குள் மாய்ந்து போதல் மற்றும் தூதருக்குள் மாய்ந்து போதல் என்ற தரத்தைப் பெற்று நிரந்திரமாக உலகத்திற்கு ஒரு நிகரற்ற முன்மாதிரியை நிலைநாட்டிவிட்டார்கள்.

நிச்சயமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலகட்டம் உலக வரலாற்றின் பொன்னான காலகட்டமாகத் திகழ்ந்தது என்பதைத் தமது அமல்களின் மூலமாக நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஏனெனில், அந்த கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களே தான்- அதாவது, நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவியாளர்கள் ஆகிவிடுங்கள்! என்ற அல்லாஹ்வின் ஓசையை செவியேற்ற உடனேயே, நாங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவியாளர்கள் ஆவோம்! என்று கூறியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பாதங்களில் தமது வாழ்வுகளை அர்ப்பணித்து விட்டார்கள்.

பொருள் தியாகம் செய்யுமாறு கூறப்படும் போது, சஹாபா தமது வீடுகளிலிருந்து கிடைத்ததை எடுத்துக் கொண்டு வந்து அன்னார் முன் சமர்ப்பித்துவிடுவார்கள். நன்மையான பணிகளில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்லும் ஓட்டம் இருந்து வந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கூட வீட்டிலிருந்து செல்வத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமரே! நீர் என்ன கொண்டு வந்துள்ளீர்? என்று வினவினார்கள். அப்போது அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது செல்வத்தில் பாதியைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று பதிலளித்தார்கள்.

இவ்வாறே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் வினவப்பட்டது. அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது முழு செல்வத்தையும் கொண்டு வந்திருக்கிறேன். வீட்டில் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயரை விட்டு வந்துள்ளேன் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைத் (ரலி) அவர்களிடம் மிகவும் குறைவான சொத்து இருந்தது. மிகவும் நெருக்கடியான முறையில் மனைவி மக்களின் வயிற்றை நிரப்பி வந்தார்கள். ஆனால், ஒரு நேரம் வந்தது! அப்போது இஸ்லாத்திற்குப் பொருள்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

தேவை இருந்தது. அதைப் பூர்த்தி செய்வதற்காக சந்தா வழங்குமாறு அறிவிக்கப்பட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம் செல்வம் குறைவாகத்தான் இருந்தது; ஆயினும், உள்ளத்தில் ஈமானிய வெப்பம் இருந்தது. அதனால், நிர்பந்தந்திற்குள்ளாகி அவர்கள் தம்மிடம் இருந்த அனைத்தையும் இறைவழியில் கொடுத்துவிட்டார்கள். அவர்களின் தந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முறையிடும் விதத்தில் இதைப் பற்றிக் கூறினார். அப்போது அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை அழைத்து, இறைவன் உமது சதக்காவை ஏற்றுக் கொண்டு விட்டான்; ஆனால், இப்போது உமது தந்தையின் மரபுரிமைச் சொத்தாக உமக்குத் திருப்பித் தருகிறான். நீர் அதை ஏற்றுக் கொள்வீராக! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் 17 - 18 வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் மிக அதிகமாக, உயிரை அர்ப்பணிக்கும் வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகத் துணிச்சலாக முன் நின்றார்கள். ஆனால், பொருள் தியாகம் செய்யும் விதத்திலும் அவர்கள் யாரையும் விட பின்தங்கி இருக்கவில்லை. போர்களின் செலவுகளுக்காகத் தமது செல்வத்தை முன்வைப்பதாக உறுதி எடுத்திருந்தார்கள். இந்த உறுதிமொழியை மனஉறுதியோடும் நிரந்தர தன்மையோடும் நிறைவேற்றினார்கள். தபூக் போரின் போது, பொதுவாக முஸ்லிம்கள் வறுமையில் மூழ்கியிருந்த போது, போர்த் தளவாடங்களைக் கிடைக்கச் செய்வதில் மிக அதிகமாக சிக்கல் ஏற்பட்டிருந்தது. இவர்கள் ஒரு பெரிய தொகையை முன் வைத்தார்கள். இதனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு வள்ளல் பட்டம் வழங்கினார்கள்.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ ۚ فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ ۖ وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا

பொருள்: பொருள்: சில மனிதர்கள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திக் காட்டினர்.

(அதிகாரம் அல் அஹ்ஸாப் 33:24)

இந்தத் திருவசனம் இறங்கியபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தல்ஹாவே! நீரும் அந்த மக்களைச் சேர்ந்தவர் ஆவீர் என்று கூறினார்கள். மேலும், لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

(அதிகாரம் அல் ஆலி இம்ரான் 3:93)

என்ற வசனம் இறங்கிய போது, அந்தத் தருணத்திலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், பின்பற்றத்தக்க முன்மாதிரியைக் காட்டியவாறு பேரூஹா எனும் தோட்டத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் இளமைப் பருவத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் மிகப் பெரிய வாணிபராகவும் மிகப் பெரிய செல்வந்தராகவும் திகழ்ந்தார்கள். ஆனால், செல்வத்தை சிறிதும் நேசிக்கவில்லை. மாறாக, அதை இறைவழியில் செலவு செய்வதிலேயே மகிழ்ச்சி அடைந்து வந்தார்கள்.

ஒரு முறை அவர்களின் வாணிபக் குழு மதீனா வந்தது. அப்போது அதில் 700 ஒட்டகங்கள் மீது கோதுமை, மாவு மற்றும் இதர உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன. இது ஓர் அசாதாரணமான விஷயமாக இருந்ததால், மதீனா முழுவதும் இதைப் பற்றிப் பேசப்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:-

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

அப்துர் ரஹ்மான் தவழ்ந்தவாறு சொர்க்கத்தில் நுழைவார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் வரையும் இந்த விஷயம் எட்டியது. அப்போது அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் முன் ஆஜராகி, நான் இந்தப் பயணக்குழு முழுவதையும் அனைத்துப் பொருட்களோடு, எதுவரை என்றால், பொதிசேனத்தையும் கூட இறைவழியில் அர்ப்பணித்து விட்டேன். இதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்! என்று கூறினார்கள்.

அவர்கள் வஃபாத் ஆகும் தருணத்திலும் கூட 50 ஆயிரம் தீனாரையும் 1000 குதிரைகளையும் இறைவழியில் அர்ப்பணிப்பதற்கு உயில் எழுதினார்கள். இவை போக, பத்ர் போர் சஹாபிகளில் அப்பொழுது வரை உயிரோடு இருந்தவர்களில் ஒவ்வொருவருக்கும் 400 - 400 தீனார் வழங்குவதற்கு உயில் எழுதினார்கள்.

அப்பொழுது வரை, பத்ர் போர் ஸஹாபிகள் 100 பேர் உயிரோடு இருந்தார்கள்;

அவர்கள் அனைவரும் அந்த உயிலில் இருந்து மகிழ்ச்சியுடன் பயன் பெற்றார்கள்; எதுவரை என்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தமது பங்கைப் பெற்றார்கள் என்று கூறப்படுகிறது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 34 வயதில் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவர்கள் மிகப்பெரும் செல்வந்தராக இருந்தார்கள். முஸ்லிம்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்த போது தண்ணீர்ப் பஞ்சம் அதிகம் இருந்தது. பேரூமா என்று ஒரு கிணற்றின் தண்ணீர் மட்டுமே மிகவும் உன்னதமானதாகவும் இனிமையானதாகவும் இருந்தது. ஆனால், அது ஓர் யூதருடைய சொத்தாக இருந்தது. அவர் தண்ணீரை விலைக்கு விற்று வந்தார். மறுபுறம் சஹாபாவின் பொருளாதார நிலை தண்ணீரை விலைக்கு வாங்கி குடிக்கும் அளவிற்கு இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்தக் கிணற்றை அதனுடைய சொந்தக்காரரான யூதரிடமிருந்து 20,000 திர்ஹமுக்கு விலைக்கு வாங்கி அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்காக ஆயத்தம் மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்த போது அளவுக்கதிகமான நிதி நெருக்கடி இருந்தது. போர்த் தளவாடங்களை ஏற்பாடு செய்வதில் மிகவும் சிரமம் ஏற்பட்டு வந்தது. அன்னார் (ஸல்) கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களிடம் பொருளுதவி செய்யுமாறு கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 10,000 போர் வீரர்களுக்கான செலவுகளை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்குத் தேவையான சாதாரணமான பொருள்கள் கூட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பணத்திலிருந்து வாங்கப்பட்டது. இது போக, 1000 ஒட்டகங்கள், 70 குதிரைகள் மற்றும் பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்காக 1000 தீனார் ரொக்கப் பணத்தையும் சமர்ப்பித்தார்கள்.

அன்பர்களே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபா பெருமக்கள் மட்டுமல்லாமல் பெண் சஹாபிகளும் கூட பொருள் தியாகம் செய்வதில் எந்தக் குறையையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் தமது அன்பிற்குரிய மைந்தர்களை இஸ்லாத்தின் தலை நிமிர்விற்காக சமர்ப்பித்த அதே வேளையில் தமக்கு மிகவும் பிடித்தமான பொருள்களை அதாவது, பொன், பொருள், நகைகள் ஆகியவற்றை எவ்வித தயக்கமுமின்றி இறைவழியில் செலவு செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய துணைவியாரான ஹஸ்ரத் ஸவ்தா (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீண்ட கையையுடைய பெண் எல்லாருக்கும் முதலாக சொர்க்கத்தில் என்னை சந்திப்பார். அதாவது, எல்லாரையும் விட அதிகம் இறைவழியில் செலவு செய்யும் பெண். இறைவழியில் செலவு செய்வது, இறைவன் மற்றும் அவனது தூதரை நெருங்குவதற்கும் அவர்களுடன் இருப்பதற்கும் காரணியாகத் திகழ்கிறது என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

கண்ணியத்திற்குரிய செவியேற்போரே! உயிரை அர்ப்பணித்த சஹாபா பெருமக்களிடமும் அவர்களைப் பின்பற்றிய மக்களிடமும் இந்தத் தியாக உணர்வு நிலைபெற்றிருந்த காலம் வரை, முஸ்லிம்களில் முன்னேற்றங்களுக்கான

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
No. 100/59-A, 1st Floor, South Thalkat Street, Melapalayam, Tirunelveli-627005, Tamil Nadu, India.
+91 9659389953
toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/33, 1st Floor Village Road, Balaji Nagar Extension, Puzhuthivakkam, Chennai-600091, Tamil Nadu, India
+91 90-2150339
alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot, Siphraya, Bangrak, Bangkok - 10500, Thailand
+66 633751327
gemscertify22@gmail.com

#12, KNG Garden, Sundakamuthur Main Road, Kuniyamuthur, Coimbatore - 641 008.
93632 27229
successraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
93632 27229

காலகட்டம் தொடர்ந்து வந்தது. அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் கிடைத்து வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்திலிருந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓர் இருள் நிறைந்த காலகட்டம் துவங்கி விட்டது.

அதன் காரிருள் 1000 ஆண்டு காலகட்டத்தில் தனது உச்சத்தை எட்டி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கு ஏற்ப இஸ்லாம் வெறும் பெயரளவில் எஞ்சி விட்டது. தியாக உணர்வு மறைந்து போனது. உண்மையான ஈமான் உலகை விட்டு கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்தது. அப்போது இறைவனின் கருணை பொங்கி எழுந்தது. திருக்குர்ஆனின் முஹம்மது (ஸல்) எனும் அதிகாரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அதாவது, "முஸ்லிம்களே! நீங்கள் இஸ்லாம் தழைக்க அர்ப்பணிப்பதை விட்டு முகந்திருப்பி விட்டால், இறைவன் உங்களுக்கு மாற்றாக மற்றோரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். பிறகு, அவர்கள் உங்களைப் போன்று, தியாகம் செய்வதை விட்டு முகந்திருப்பக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள்."
(அதிகாரம் முஹம்மத் 47: 39)

என்ற இந்தத் தெளிவான முன்னறிவிப்புக்கு ஏற்ப, யார் மூலமாக இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றி நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அந்த முஹம்மதிய மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை 14 நூற்றாண்டின் துவக்கத்தில், அல்லாஹ் உலகிற்கு அனுப்பினான்.

அன்னார் (அலை) எப்படிப்பட்ட தருணத்தில் வருகை தந்தார்கள் என்றால், உலகத்தின் நாலாபுறமும் வழிகேடு மற்றும் வழிதவறுதலுக்கான காலமாக அது இருந்தது. பொய்யின் ஆற்றல்கள் இஸ்லாத்தை பலவீனப்படுத்துவதற்கான முழு முயற்சியில் ஆழ்ந்திருந்தன. லட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறிஸ்தவம் மற்றும் இதர மதங்களின் ஏமாற்றத்தில் சிக்கிக் கொள்ள ஆரம்பித்திருந்தனர்.

இஸ்லாமோ முழு உலகையும் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியைக் கொண்டு ஒளிபெறச் செய்ய வந்தது. அந்த ஒளியை அணைக்கும் முயற்சியில் (அந்த மக்கள்) ஈடுபட்டிருந்தனர். இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில், காதியான் என்ற பிரசித்தி பெறாத ஊரிலிருந்து, ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியார், அன்னார் (ஸல்) மீது எல்லாரையும் விட அதிகம் துரூத் மற்றும் சலாம் ஓதக்கூடிய ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் தோன்றினார்கள். அன்னாருக்கு அல்லாஹ் இந்த நற்செய்தியை வழங்கினான்:

. நான் உமது பெயரை கண்ணியத்துடன் உலகத்தில் பரப்புவேன். எதுவரை என்றால், பேரரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள்.

மேலும், பணியை நிறைவு செய்வது தொடர்பாக அல்லாஹ் இந்த நற்செய்தியையும் வழங்கினான்:

"உயிரை அர்ப்பணிக்கக்கூடிய மற்றும் நன்றியுணர்வுள்ள ஒரு பரிசுத்தமான ஜமாஅத்தையும் நான் உமக்கு வழங்குவேன்."

அடுத்து, அல்லாஹ் இந்த நற்செய்தியையும் வழங்கினான்:

"எவர்களுடைய உள்ளங்களில் நாம் எம்மிடமிருந்து இல்ஹாம் இறங்கச் செய்வோமோ அவர்கள் உமக்கு உதவி புரிவார்கள்."

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) தமது ஒரு உருது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்போது ஈமான் கொண்டவர் அருளுக்குரியவர் ஆவார்; என்னை அடைந்தவர் ஸஹாபிகளுடன் இணைந்துவிட்டார்.(கவிதை வரிகள்)

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் ஆன்மாவைக் கொண்ட, எல்லாருக்கும் முதலாவதாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களிடம் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த ஹஸ்ரத் மௌலானா ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் பிற்காலத்தில் தமது நிகரற்ற உளத் தூய்மை மற்றும் தியாகத்தின் விளைவாக முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) ஆகத் திகழ்ந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதுகிறார்கள்:

நான் தங்களது வழியில் அர்ப்பணமாகிறேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல; தங்களுடையதே. மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! வழிகாட்டியே! என்னுடைய சொத்து, செல்வங்கள் அனைத்தும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகிவிட்டால், எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிவிட்டது என்று நான் முழுவதுமாக உண்மையைக் கூறுகிறேன்.''
(நூல் - ஃபத்ஹே இஸ்லாம் (இஸ்லாத்தின் வெற்றி) உருது பக்கம்: 36)

அவர்களின் தொண்டுகளை நினைவுகூர்ந்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இஸ்லாத்தை மேலோங்கச் செய்வதற்காக தாம் சம்பாதித்த தூய்மையான பணத்தைக் கொண்டு அவர்கள் செய்து கொண்டிருக்கும் தொண்டுகளை, அப்படிப்பட்ட தொண்டுகளை என்னாலும் செய்ய முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! என்ற ஏக்கத்துடன் பார்க்கிறேன். அவர்கள் எனக்காக தமது செல்வத்தை என்ன, தமது உயிரையும் கண்ணியத்தையும் கூட அர்ப்பணிக்க தயங்குவதில்லை.
(நூல் - ஃபத்ஹே இஸ்லாம் (இஸ்லாத்தின் வெற்றி) உருது பக்கம்: 35)

ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களைப் போன்று தியாகம் மற்றும் தொண்டு செய்வதற்கான உணர்வு கொண்டிருந்த எண்ணற்ற சான்றோர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும், தமது சொத்து செல்வங்கள் எல்லாம் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகி விட வேண்டும் என்றே ஆசை கொண்டார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாமே கூறுகிறார்கள்:

என்னுடைய ஜமாஅத்தைச் சேர்ந்த மக்களில் குறைந்தபட்சம் ஒரு லட்சம் பேர் உண்மையான உள்ளத்தோடு என் மீது ஈமான் கொண்டுள்ளார்கள்; நற்செயலாற்றுகின்றார்கள் என்று என்னால் சத்தியம் செய்து கூற முடியும். என்னுடைய ஜமாஅத் எந்த அளவு நன்மை மற்றும் திறமைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதோ இதுவும் ஓர் அற்புதம் என்றே நான் பார்க்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தால் அர்ப்பணமாகிறார்கள். இன்று அவர்களிடம், உங்களின் செல்வங்கள் அனைத்தையும் விட்டுக்கொடுங்கள் என்று கூறப்பட்டால், அவர்கள் விட்டுக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.
(நூல் சீரத்துல் மஹ்தி பாகம் 1 பக்கம் 145)

ஆக, அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இது போன்ற தியாகத்திற்கான எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் குரலுக்கு செவிசாய்த்தவாறு எல்லா வகையான மார்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தமது உடல், பொருள், உயிர் ஆகியவற்றை ஹுஸூர் (அலை) அவர்களின் காலடியில் அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது:-

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு லூதியானாவில் முக்கியமான பிரசுரம் ஒன்றை அச்சடிப்பதற்காக 60 ரூபாய் தேவைப்பட்டது. அந்த நாள்களிலேயே அன்னாரின் ஒரு சிறந்த ஸஹாபி ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் லூதியானா வருகை தந்திருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அவர்களை வரவழைத்து, இப்போது இந்த முக்கியமான தேவை ஏற்பட்டுள்ளது; உங்கள் ஜமாஅத்தால் இவ்வளவு பெரிய தொகையை ஏற்பாடு செய்ய முடியுமா? என்று கேட்டார்கள். அவர்கள், தலைவர் அவர்களே! இன்ஷாஅல்லாஹ் செய்ய முடியும். நான் சென்று பணத்தைக் கொண்டு வருகிறேன் என்று பணிவுடன் கூறினார்கள். அவர்கள் உடனடியாக கபூர்த்தலாவுக்குச் சென்றார்கள். ஜமாஅத்தின் எந்த நபரிடமும் கூறாமல், தமது மனைவியின் ஒரு நகையை விற்று 60 ரூபாய் பெற்றார்கள். (அதை) ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டார்கள்.
(நூல் - அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 4 பக்கம் 41)

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 09 OCTOBER 2025 Issue No.41

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


இது ஒரு நீண்ட அறிவிப்பாகும். ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் தனியாகவே இந்தத் தொண்டை நிறைவேற்றியிருந்தார்கள். கபூர்த்தலாவின் ஜமாஅத் மக்களிடம் இணைந்து கொள்ளுமாறு கூறியிருக்கவில்லை. எனவே, இந்த நிகழ்வைப் பற்றி தெரிய வந்ததும், அதே ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்த முன்ஷீ அரூடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் ஆறு மாதங்கள் வரை,ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் மீது, அவர்கள் தங்களைப் பொருள் தியாகம் செய்வதை விட்டும் இழப்பிற்குரியவர்களாக வைத்துவிட்டார்களே! என்று கோபமாக இருந்தார்கள். மாய்ந்து போகக்கூடிய இந்த மக்கள்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழுங்கப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் தொடர்பாக அறிவிப்பில் வருகிறது. அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக ஆயிரம் ரூபாய் வாக்குறுதியாக எழுதினார்கள். தில்லியிலிருந்த தமது ஒரு வீட்டை விற்று இந்தத் தொகையை செலுத்தி விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக அறிவித்த போது ஹஸ்ரத் மியான் ஷாதீ கான் சாஹிப் ஸியால்கோட்டீ (ரலி) அவர்கள் கட்டில்கள் தவிர, தமது வீட்டிலிருந்த அனைத்துப் பொருள்களையும் 300 ரூபாய்க்கு விற்று முழு தொகையையும் ஹுஸுர் (அலை) அவர்கள் முன் சமர்ப்பித்து விட்டார்கள். அதைக் கண்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னிறைவை வெளிப்படுத்திய வண்ணம், தாங்களோ ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்மாதிரியைக் காட்டியுள்ளீர்கள் என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட உடனேயே அவர்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்று கட்டில்களையும் விற்று முழு தொகையையும் சந்தாவில் கொடுத்து விட்டார்கள்.

(நூல் - தாரீகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யத்தின் வரலாறு) தொகுதி 2 பக்கம் 147)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

விறகு வியாபாரி மியான் ஷாதி கான் (ரலி) அவர்கள் சியால்கோட்டைச் சார்ந்தவர் ஆவார்கள். தற்போது அவர்கள் ஒரு பணிக்காக 150 ரூபாயை சந்தாவாக செலுத்தி இருந்தார்கள். இப்போது அவர்கள் அந்தப் பணிக்காக 200 ரூபாய் சந்தா அனுப்பி விட்டார்கள். அவர்களே எந்த அளவு தேவையுடைய நபராக இருக்கின்றார்கள் என்றால், அவர்களது வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களையும் நாம் பார்த்தோமேயானால், அனைத்து சொத்துக்களின் மதிப்புமே 50 ரூபாயை விட அதிகமாக இருக்காது. அவர்கள் தமது கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இவை பஞ்சத்தின் நாள்களாகும். உலக வியாபாரத்தில் அழிவு ஏற்படுவது தெளிவாகத் தெரிகிறது. எனவே, நாம் மார்க்க ரீதியான வியாபாரத்தை மேற்கொள்வதே சிறந்ததாகும். எனவே என்னிடம் இருந்த அனைத்தையும் அனுப்பி விட்டேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

உண்மையில் இவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்த பணியைச் செய்துள்ளார்கள்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3பக்கம் 315 -ஜூலை 1, 1900 அன்று வெளியானபிரசுரம்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் தியாகங்கள் எந்த அளவு அதிகமாக இருந்தனவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்களுக்கு, நீங்கள் இயக்கதிற்காக எந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளீர்கள் என்றால், இனி நீங்கள் தியாகம் செய்ய வேண்டிய தேவையில்லை என்று எழுத்துப்பூர்வமான சான்றளித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தக் காலம் எனக்கு நினைவிருக்கிறது! அப்போது குருதாஸ்பூரில் அன்னார் (அலை) மீது வழக்கு நடந்து கொண்டிருந்தது. அதற்குப் பணம் தேவைப்பட்டது. அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் தமது தோழர்களிடம், செலவுகள் அதிகரிக்கின்றன. லங்கர் கானா இரண்டு இடங்களில் செயல்படுகிறது. ஒன்று காதியானில்; இன்னொன்று இங்கு குருதாஸ்பூரில். இது போக, (நீதிமன்ற) வழக்கிலும் செலவாகிறது. எனவே, தோழர்கள் பொருளுதவியின் பால் கவனம் செலுத்தவும்' என்று அறிவித்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்களின் அறிவிப்பு டாக்டர் சாஹிப் அவர்களை அடைந்த போது, தற்செயலாக அன்று அவர்களுக்கு 450 ரூபாய் சம்பளம் கிடைத்தது. அந்த சம்பளம் முழுவதையும் அப்பொழுதே ஹுஸுர் (அலை) அவர்களுக்கு அனுப்பி விட்டார்கள். தோழர் ஒருவர், நீங்கள் வீட்டுத் தேவைக்காக கொஞ்சம் பணத்தை வைத்திருக்கலாமே? என்று கேட்டார். அதற்கு அவர்கள், இறைவனுடைய மஸீஹ் மார்க்கத்திற்காகத் தேவை இருக்கிறது என்று எழுதுகின்றார். பிறகு, வேறு யாருக்காக என்னால் வைக்க முடியும்? என்று கூறினார்கள்.

(டிசம்பர் 27, 1926 அன்று ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு - அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம் 403)

இதே போன்று ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா பீர் மன்ஸுர் அஹ்மத் சாஹிப் அவர்கள் தொடர்பாக, வழக்கறிஞர் ஹஸ்ரத் மிர்ஸா அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா பீர் மன்ஸுர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் யஸ்ஸர்னல் குர்ஆன் எனும் விதிமுறை நூலைத் உருவாக்கியவர் ஆவார்கள். இந்த விதிமுறை நூல் அதிகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தக் காலத்தில் அவர்களுக்கு நூற்றுக்கணக்கான ரூபாய் மாத வருமானமாக வந்தது. ஆனால், அவர்கள் மார்க்கத்திற்காகத் தியாகம் செய்யும் நிலை எப்படி இருந்ததென்றால், தமது மாதச் செலவுக்காக வெறும் 30 ரூபாய் மட்டுமே வைத்துக் கொள்வார்கள்.

மற்ற அனைத்தையும் திருக்குர்ஆன் வெளியீட்டிற்காகவும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். 1940 க்குப் பிறகு விலைவாசிகள் ஏறத் துவங்கியதும் மாதச் செலவுக்காக 40 ரூபாய் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஓராண்டில் 10,000 ரூபாய் மார்க்கத் தொண்டிற்காக வழங்கினார்கள்

.(அன்ஸாருல்லாஹ் மாத இதழ் -1969 ஆம் ஆண்டு ரப்வா

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்.....


**National Watch Company**



B. Mohamed Adil
93632 06679
99433 38000

Sales & Service

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad